2021-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09.ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 4,00 மணிக்கு நடைபெற்ற நகரமன்ற அவசரக்கூட்டத்தின் நடவடிக்கைகளின் உண்மை நகல்.

முன்னிலை– திரு.கு.ராஜேந்திரன்,எம்.இ.,
தனி அலுவலர்,ஆம்பூர் நகராட்சி

1. மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், நகர்புற மற்றும் நீர் வழங்கல்துறை அமைச்சர் அவர்கள் 2021–22–ம் ஆண்டு நகராட்சி நிர்வாக துறை மான்யக்கோரிக்கையில் நகராட்சிகளில் LPG கொள்திறனுடன் கூடிய நவீன தகன எரிவாயு மேடை ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க அறிவிப்பு வெளியிட்டதன் அடிப்படையில், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண்:14006/2021/தி2–2 நாள்:08.09.2021 தேதிய கடிதத்தில், மேற்காணும் பணிக்கு உரிய திட்ட பிரேரணை அனுப்ப தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கஸ்பா,அ. பகுதியில் LPG கொள்திறனுடன் கூடிய நவீன தகன எரிவாயு மேடை ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வேண்டி திட்டபிரேரணை நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப நகரமன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மதிப்பீடு தொகை ரூ. 150.00 இலட்சத்தினை முழுமான்யமாக பெற மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணிக்கான நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களிடமும் தொழில்நுட்ப அனுமதி முதன்மை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,சென்னை அவர்களிடம் பெறவும் உரிய முன்மொழிவுகள் அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்
4. அரசு தொழில்நுட்ப கல்லூரியில் உரிய மண்பரிசோதனை செய்யவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்(இ1/1273/2021)

தீர்மான எண்.124 –அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

2 .மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், நகர்புற மற்றும் நீர் வழங்கல்துறை அமைச்சர் அவர்கள் 2021–22–ம் ஆண்டு நகராட்சி நர்வாக துறை மான்யக்கோரிக்கையில் நகராட்சிகளில் பழதடைந்த நிலையில் உள்ள சமுதாய கழிப்பிடங்களை நவீன கழிப்பிடங்களாக மாற்ற அறிவிப்பு வெளியிட்டதன் அடிப்படையில், 2031 தொலை நோக்கு திட்டமான இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்குறிப்பிட்டுள்ள இடங்களில் பழதடைந்த நிலையில் உள்ள சமுதாய கழிப்பிடங்களை நவீன கழிப்பிடங்களாக மாற்றி அமைக்க மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வேண்டி திட்டபிரேரணை நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப நகரமன்ற அனுமதி கோரப்படுகிறது.

| வ,எண் | இடத்தின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ,இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | பாவேந்தர் தெரு | 4,00 |
| 2 | துரைசாமி ராஜா தெரு | 4,00 |
| 3 | மளிகை தோப்பு | 5,00 |
| 4 | சுண்ணாம்பு காளை | 5,00 |
| | மொத்தம் | 18,00 |

அலுவலக குறிப்பு :1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மதிப்பீடு தொகை ரூ. 18.00 இலட்சத்தினை முழுமான்யமாக பெற மன்றம் அனுமதிக்கலாம்.

3. பணிக்கான நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களிடம் பெற உரிய முன்மொழிவுகள் அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்(இ1/1292/2021)

தீர்மான எண்.125 –அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

3. ஆம்பூர் நகராட்சிக்கு எதிராக திரு.அப்துல் காதர், ஆம்பூர் என்பவர் மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண்.W.P.No: 18319/2021–ல் தொடரப்பட்ட வழக்குகில், இந்நகராட்சி சார்பாக சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு. P.சீனிவாஸ், 31/15, 1வது மெயின் ரோடு, காந்தி நகர், அடையார், சென்னை–20 அவர்கள் ஆஜாராகி வாதிட வழக்கறிஞர் கட்டணமாக தோராய செலவினம் ரூ.15,000/–(ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) வழக்கறிஞர் திரு. P.சீனிவாஸ் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகு குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1272/2021/எப்1

தீர்மான எண்.126 –அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

4. இந்நகராட்சிக்கு தேவையான சொத்துவரிகுடிநீர் கட்டணம், தொழில் வரி, மற்றும் வரியில்லாஇனங்களின் வரிசெலுத்தும் கணினிஇரசீதுகள், பிறப்பு சான்று படிவங்கள், பதிவேடுகள், A4 Paper மற்றும் Tonner-கள் தற்போது இருப்பில் இல்லாத காரணத்தால் மேற்படி பொருட்களை வடாற்காடு மாவட்ட சிறுதொழில் கூட்டுறவு அச்சகம் விட், வேலூர் (Napco Ltd Vellore) அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி பணியினை மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் தொகை ரூ.7.00இலட்சத்திற்க்கு(ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u> அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.433/பி3/2018.

தீர்மான எண்.127 –அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

5. இந்நகராட்சிஎல்லைகுட்பட்ட வார்டுஎண்.25முதல்36 வரையில்லான தெருவிளக்கு பராபரிப்பு பணிக்காக சுவிட்ச் பாக்ஸ், மீட்டர் பாக்ஸ், சர்வீஸ் ஒயர், Fuse Carrier ஆகியவை மிகவும் பழுதடைந்துள்ளதாலும் இதனால் அடிக்கடி மின் விளக்குகள் எரியாமல் தடைபடுகிறது. பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்தவண்ணம் உள்ளது. எனவே, மேற்கண்ட மின் உதிரிபாகங்கள் வாங்கி கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.3,30,000/-க்கு(ரூபாய் மூன்று இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அங்கீகாராத்திற்குவைக்கப்படுகிறது

அலுவலகக்குறிப்பு:-1.அங்கீகாரம் வழங்கலாம்.

2.மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கலாம்.
(ந.க.எண்.933/இ2/2021)

**தீர்மான எண்.128 –அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

6. இந்நகராட்சியின் 2020-21-ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கை மற்றும் ஆண்டு கணக்கு (பொதுநிதி, குடிநீர் நிதி மற்றும் கல்விநிதி) 5 பிரதிகள் பிரிண்ட் எடுத்து பைண்டிங் செய்யும் பணிக்கு ஆகும் செலவினத் தொகை (ரூ 64,000/மற்றும் GST 12% தொகை ரூ 7680/-) மொத்தம் ரூ 71,680/-க்கு அங்கீகாரம் கோரப்படுகின்றது. தணிக்கை அறிக்கையின் அவசியத்தை கருதி, 26.08.2021-ஆம் தேதியன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் &மற்றும் முகவரி | விலைப்புள்ளிதொகை ரூ | |
|---|---|---|---|
| | | பக்கம் ஒன்றுபிரிண்ட் எடுக்க | புத்தகம் (Register) ஒன்றுபைன்டிங் செய்ய |
| 1 | எஸ். சரவணன்<br>கிங் ஆப்செட் பிரின்டர்ஸ், ஆம்பூர். | 1.75 | 50.00 |
| 2. | ஸ்ரீ ஹரிபிரிண்டர்ஸ்,<br>ஆம்பூர். | 2.50 | 60.00 |
| 3. | உமாஆப்செட்&கிராபிக்ஸ்,<br>ஆம்பூர். | 2.75 | 75.00 |

**அலுவலககுறிப்பு:** 1.மேற்கண் டபணிக்கு ஆகும் உத்தேச செலவின தொகைக்கு அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணியினை வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

2.மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு வரப்பெற்றுள்ள குறைவான விலைப் புள்ளியினை வழங்கியுள்ள திரு.சரவணன், கிங் ஆப்செட் பிரின்டர்ஸ், என்பவரதுவிலைப் புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

3. தணிக்கை அறிக்கையின் அவசியத்தை கருதி, தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகளின் கோரியமைக்கும், பணி உத்திரவு வழங்கியமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண்:1045/2021/பி2**

**தீர்மான எண்.129 –அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

7. இந்நகராட்சியின் 2021-22-ஆம் ஆண்டுநடப்பு மற்றும் நிலுவைசொத்துவரி, தொழில்வரிமற்றும் குடிநீர் கட்டணம் ஆகியவற்றை 100% வசூல் செய்ய 36 வார்டுகளுக்கானகேட்பு அறிவிப்பு (Demand Notice) பிரிண்ட்எடுத்துபொதுமக்களுக்குவிநியோகம் செய்துவசூல் பணியினைமேற்கொள்ளகேட்பு அறிவிப்பு (Demand Notice) பிரிண்டிங் செய்யஆகும் செலவினத் தொகை (ரூ 68,000/- மற்றும் GST 12% தொகை ரூ 8160/) மொத்தம் ரூ 76,160/-க்குஅங்கீகாரம் கோரப்படுகின்றது. மேற்படி, பணிக்கு18.08.2021-ஆம் தேதியன்றுவிலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றவிலைப்புள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளிதொகை ரூ (பக்கம் ஒன்றுபிரிண்ட்எடுக்க) |
|---|---|---|
| 1 | எஸ். சரவணன்<br>கிங் ஆப்செட் பிரின்டர்ஸ், ஆம்பூர். | 1.75 |
| 2. | ஸ்ரீ ஹரிபிரிண்டர்ஸ்,<br>ஆம்பூர். | 2.50 |
| 3. | உமாஆப்செட்&கிராபிக்ஸ்,<br>ஆம்பூர். | 2.75 |

<u>அலுவலககுறிப்பு:</u>1.மேற்கண்ட பணிக்கு ஆகும் உத்தேச செலவின தொகைக்கு அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணியினை வருவாய்நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.
2.வசூல் பணியின் அவசியத்தை கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு குறைவான விலைப் புள்ளியினை வழங்கியுள்ள திரு.எஸ்.சரவணன், கிங் ஆப்செட் பிரின்டர்ஸ் ,என்பவரது விலைப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்:841/2021/பி2**

**தீர்மான எண்.130 –அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

8. இந்நகராட்சியால் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய வருமானவரி மற்றும் பொருட்கள் மற்றும் சேவை வரி(GST) 2020-21 விபரத்தை தணிக்கையாளர் மூலமாக அரசு இணையதளத்தில் பதிவேற்றம் செய்து செலுத்தும் பணியினை திரு.A..Gopinath, Ayya Banu Associates, Ambur நிறுவனத்தின் மூலம் மேற்கொண்ட வகையில் வரப் பெற்றுள்ள பட்டியல் தொகை ரூ.18,000/-ஐ திரு.A.Gopinath, Ayya Banu Associates, Ambur அவர்களுக்கு வழங்க அங்கிகாரம் கோரப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு:</u> அங்கீகாரம் வழங்கலாம்.
2.மேற்கண்டபணிக்கு ஆகும் செலவின தொகைக்கு அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணியினை வருவாய் நிதிதலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண்:845/2021/பி2**

**தீர்மான எண்.131 –அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

**ஒம்/–கு.ராஜேந்திரன்**
**தனி அலுவலர்**
**ஆம்பூர் நகராட்சி**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்(பொ)**
**ஆம்பூர் நகராட்சி**